தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 27

2010 மே 10, திங்கட்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்”

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

151—

கட்டட வசதி

***102021—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 மே 10

அரூர் மண்டலப் போக்குவரத்துக் கழகத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட்., தருமபுரி மண்டலத்திற்கு உட்பட்ட அரூர் பணிமனை மற்றும் அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அரூர் பணிமனைக்கு அலுவலகம் போதுமானதாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் பணிமனை சொந்தக் கட்டடத்திலே இயங்கி வருகிறது என்று சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் பாப்பிரெட்டிப்பட்டி பகுதி, பொ. மல்லாபுரத்தில் கட்டப்பட்டிருக்கிற பணிமனை இப்போது புதிதாகத் தொடங்கப்பட்டது. அதற்கு இந்த ஆண்டு அலுவலகக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை இப்போது தந்துகொண்டிருக்கிறோம். அது உள்ளாட்சி அமைப்புகளாக இருந்தாலும், நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், இட ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்கிற இந்த நேரத்தில், ஓட்டுநர்கள், நடத்துநர்களாக கிட்டத்தட்ட 100-க்கு 99 விழுக்காடு ஆண்கள் மாத்திரமே இருக்கிறார்கள். புதிதாக பெண்களுக்குப் பயிற்சி அளித்து, ஓட்டுநர்களாகவும், நடத்துநர்களாகவும் நியமிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பிரெட்டிப்பட்டி பகுதியிலே புதிய அலுவலகம் என்பது இல்லை. போக்குவரத்துக் கழகத்திற்கு பணிமனையிலேதான் அலுவலகம் அமையும். எனவே, அங்கே இடம் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தைப் பார்த்து மாவட்ட ஆட்சியர்மூலமாக எங்களுக்கு

2010 மே 10]

அளிப்பார்களேயானால், புதிய பணிமனை அமைப்பதற்குரிய நடவடிக்கை இந்த ஆண்டு எடுக்கப்படும். அதற்கு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதி உதவியும் வேண்டும். அந்த அலுவலகத்தை அமைப்பதற்குரிய முயற்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பெண்கள் ஓட்டுநர்களாகவும், நடத்துநர்களாகவும் எடுத்துக்கொள்ளப்படுவார்களா என்று கேட்கிறார். ஏற்கெனவே, 100 பேரை எடுத்தபோது அதில் 4, 5 பெண்களை ஓட்டுநர்களாகவும், நடத்துநர்களாகவும் நியமிக்க நேர்காணல் அழைப்பு விடப்பட்டது. அவர்களும் வந்து கலந்துகொண்டு, ஒருசில பேருக்கு வேலைவாய்ப்பும் தரப்பட்டது. வேலைவாய்ப்பு பெற்ற ஒரே மாத காலத்தில் எங்களால் ஓட்டுநராக இயங்க முடியவில்லை, கண்டக்டராக இயங்க முடியவில்லை, மாற்றுப் பணி வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்ற காரணத்தினால், அவர்களையெல்லாம் உடனடியாக எடுக்கின்ற அந்தப் பணியில் போக்குவரத்துக் கழகம் இப்போது ஈடுபடவில்லை. ஆனாலும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, இதைப் பற்றி தக்கதொரு முடிவு எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டு, இலட்சக்கணக்கான மாணவர்கள் இன்றைக்கு கல்வி கற்று வருகிறார்கள். குறிப்பாக, கிராமப்புறப் பகுதிகளில், நகரப் பேருந்தோ அரசுப் பேருந்தோ செல்லாத இடங்களில், மினி பஸ்கள் மாத்திரம் தனியார் சார்பாக இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிராமப் பகுதிகளிலே இருக்கிற மாணவ, மாணவியர் படிப்பதற்காக, மினி பேருந்தில் இந்த இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்திக் கொடுத்தால், அந்த ஏழையெளிய கிராமப்புறத்து மாணவ, மாணவியர்கள் கல்வி கற்பதற்கு வசதியாக இருக்கும். பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கின்ற நம்முடைய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு, இந்தத் திட்டத்தையும் உருவாக்கித் தர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2010 மே 10

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு ஜூன் மாதம் நடைபெறவிருக்கிற இந்தக் காலகட்டத்தில், அந்த மாநாட்டைக் கண்டு களிப்பதற்காக இலட்சக்கணக்கான தமிழ் ஆர்வம் உள்ளவர்கள் வந்துசெல்ல வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால், தமிழக அரசு இரயில்வே துறையின்மூலம் சிறப்பு இரயில்களை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டிருப்பதைப்போல, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலிருந்தும் தமிழக அரசின் சார்பாக சிறப்புப் பேருந்துகளை, அதுவும் சொகுசுப் பேருந்துகளை, குறைந்த கட்டணத்தில், மாநாட்டிற்கு, அந்த *4* நாட்களுக்கும் பயன்படுத்துகிறவகையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி சிறப்புப் பேருந்து விடுகிற திட்டத்தை நடைமுறைப்படுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் *9-35*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச பஸ் பாஸ் படிக்கின்ற மாணவர்களுக்குத் தருகின்றபோது, நகரப் பேருந்துகளில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது; அதுவும், அரசுப் பேருந்துகளில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. நகரப் பேருந்துகள் இயங்காத பகுதிகளில், புறநகர்ப் பேருந்துகள் மட்டும் இயங்குகின்ற பகுதியிலே, புறநகர்ப் பேருந்துகளிலே செல்லலாம் என்று அனுமதி தரப்பட்டிருக்கிறது. எந்தத் தனியார் பேருந்துகளுக்கும், மினி பேருந்துகளுக்கும் அந்த அனுமதி தரப்படவில்லை. ஏனென்றால், அதற்குரிய கட்டணத்தை எப்படிச் செலுத்துவது என்பதே இதுவரை முடிவு செய்யப்படவில்லை. எனவேதான், தனியார் பேருந்துகளிலே இலவச பஸ் பாஸ் அனுமதிக்கப்படவில்லை.

மினி பேருந்துகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கடந்த காலத்திலே தலைவர் அவர்கள்தான் மினி பேருந்துத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். தமிழ்நாடு முழுவதும் *4,000*-க்கும் மேற்பட்ட மினி பேருந்துகள் வழங்கப்பட்டு, அந்த மினி பேருந்துகள் வழங்கப்படுகின்றபோது ஒரு சட்டம்

2010 மே 10]

இயற்றப்பட்டது. நான்கு கிலோ மீட்டர் served area-வும், 16 கிலோ மீட்டர் unserved area-வும் என்ற வகையிலே, அந்த மினி பேருந்துகள் தரப்பட்டன. அப்படி தரப்பட்டபோது, நான்காயிரம் பேருந்துகள் வழங்கப்பட்டபோது, ஒரு மினி பேருந்து உரிமையாளர் நீதிமன்றம் சென்று, இது served area-தானே, ஒரு பேருந்து சென்றால்கூட அது served area-தானே, நீங்கள் மேலும் தரக்கூடாது என்று தடை ஆணை பெற்றுவிட்ட காரணத்தால், மீண்டும் 3,000 பேருந்துகள் வழங்க முடியாமல் இருந்தது. அதனால் அரசு நீதிமன்றத்திலே ஒரு ஒப்பந்தம்—நீதிமன்றத்திலே சொல்லி நாங்கள் இந்தத் திட்டத்தின்மேல் இனிமேல் மினி பேருந்துகள் தருவதில்லை என்று சொல்லி ஒரு புதிய திட்டத்தை இந்த அரசு இப்போது அறிவித்திருக்கிறது.

கிராமங்களில் 100 குடும்பங்கள் எந்த இடத்தில் இருக்கின்றனவோ, அந்தக் குடும்பங்கள் வசிக்கும் பகுதியில் குறுகலான பாதை இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பகுதிக்கு பேருந்து விடலாம் என்று நிர்ணயித்தால், அங்கெல்லாம் அந்தப் பேருந்துகளை விடலாமென்று அரசு ஒரு புது சட்டத்தை இயற்றியிருக்கிறது. அதற்கான hearing கூட முடிந்திருக்கிறது. அதையும் எதிர்த்து நீதிமன்றத்திலே தடை ஆணை பெற்றிருக்கிறார்கள். அந்தத் தடையாணையை நீக்குவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. தடையாணையை எடுத்த பிறகுதான் கிராமங்களுக்கு மினி பேருந்து வழங்கப்படுகின்ற பணி நடைபெறும். எனவே, மினி பேருந்துகளில், தனியார் பேருந்துகளில் இலவச பஸ் பாஸை அனுமதிக்கின்ற திட்டம் அரசிடம் இல்லை.

இரண்டாவது, கோவை மாநகருக்கு, செம்மொழி மாநாட்டிற்கு, பேருந்துகள் அனுப்பப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கின்ற 30 மாவட்டத் தலைநகரங்களிலிருந்தும், நான்கு நாட்கள் முன்னதாகவே அவர்கள் சென்று தங்கி, மாநாடு முடிந்து திரும்பி வருகின்ற வரையில் போக்குவரத்துக் கழகம் சிறப்புப் பேருந்துகளை நிச்சயமாக இயக்கும். அதுவும், வால்வோ பேருந்துகள், ஏ.சி. பேருந்துகள் என்ற வகையிலே தேவைப்படுகின்ற இடங்களிலே இயக்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூரில், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று இருந்தபோது, அங்கே M.D. அலுவலகம் பல ஆண்டுகளாக இயக்கப்பட்டு வந்தது. பிறகு Companies Act பிரகாரம் அரசு அதை 7 மண்டலங்களாகப் பிரித்த காலத்தில் அங்கிருந்த M.D. அலுவலகத்தை கொண்டுபோய் விழுப்புரத்திலே இணைத்துவிட்டார்கள். ஆனால், அங்கே அலுவலகக் கட்டடங்கள் பல காலியாக இருக்கின்றன. M.D. அலுவலகம் அங்கிருந்து அந்தப் பேருந்துகளையெல்லாம் இயக்குகின்றபோதுதான் சரியாக நிர்வாகம் செய்து முன்னேற்றம் காண முடியும். அந்த வகையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலூரிலேயே அந்த M.D. அலுவலகத்தை, மீண்டும் அந்த இடத்திலேயே துவக்குவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30-க்கும் மேற்பட்ட போக்குவரத்து அலுவலகங்கள்--மேலாண் இயக்குநர்கள்--இருந்ததை செலவைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 7 பகுதிகளாகப் பிரித்து இயங்கிக் கொண்டிருக்கிறோம். சென்னை மாநகரின் மொத்தத் தேவை, மத்திய அரசு கணக்கீட்டுப்படி 5,000 பேருந்துகள். ஆனால், இப்போது 3,000 என்ற அளவிலே இருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் 4,000 என்ற அளவிலே வருமென்ற காரணத்தால் ஒரு போக்குவரத்து மேலாண் இயக்குநர் 2,000 பேருந்துகளை மட்டுமே இயக்க முடியும், பார்க்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, சென்னை மாநகரத்தை வட சென்னை, தென் சென்னை என்று இரண்டு போக்குவரத்துப் பிரிவுகளாக பிரிக்கலாம் என்றும், அதேபோல் மதுரையில் இருக்கின்ற போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கலாம் என்றும் முடிவெடுத்து, இந்த இரண்டின் அனுமதிக்காக கம்பெனிச் சட்டத்தின்படி அனுமதி கேட்டிருக்கிறோம். ஏனென்றால், மதுரை போக்குவரத்துக் கழகம் 4,000 பேருந்துகளை உள்ளடக்கியதாக இருக்கிறது.

2010 மே 10]

கிட்டதட்ட 12 மாவட்டங்களில் அந்த போக்குவரத்துக் கழகம் இயக்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அதிகமாக பேருந்துகளை இயக்குகின்ற போக்குவரத்துக் கழகங்களை மட்டுமே பிரிக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த அரசு இருக்கிறது. ஆனால், விழுப்புரத்தை எடுத்துக்கொண்டால் அங்கு மொத்தம் 2,000-த்திலிருந்து 2,500 பேருந்துகள்தான் இருக்கின்றன.

திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், விழுப்புரம் மாவட்டம் என்று ஒரே வட்டத்திலே இயங்குகின்ற காரணத்தால், மேலும் ஒரு மேலாண் இயக்குநரை நியமித்து, ஒரு தனி அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமானால் கூடுதலாக செலவாகும் என்ற காரணத்தால், அது விழுப்புரத்திலே இருக்கிறது. நாளடைவிலே, பேருந்துகள் அதிகமாகும்போது தேவைப்படின் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு அலுவலகம் அமைக்கின்ற முயற்சியை பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

முற்பகல் 9-40

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூரிலே ATC பணிமனைக்காக புதியக் கட்டடம் கட்டுவதற்கு நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே ஏற்கெனவே கோரிக்கை வைத்தேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, அங்கே கோயில் நிலத்திற்கு துறை பணம் செலுத்தி, அதை ஏற்றுக்கொள்வதாக உறுதி கூறினார்கள். அதற்கான முன்மொழிவு அரசுக்கு வந்திருக்கிறது. அப்படி அதைக் கட்டும்பட்சத்திலே சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்துகூட 10 இலட்சம் ரூபாய் நான் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறேன். 1996-லே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அடிக்கல் நாட்டப்பட்டு கட்டப்படாமல் இருக்கிற ஒரு நிகழ்வாக இது இருந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலே, சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து நான் கொடுத்து அந்தக் கட்டடத்தைக் கட்டுகின்ற வகையிலே, அந்தப் புதிய ATC பணிமனையைக் கட்டிக் கொடுப்பார்களா என்பதையும் அதைப்போல, போக்குவரத்து அலுவலக புதிய கட்டடத்திற்கும் நில முன்மொழிவு வந்திருக்கிறது. அதையும்

அதே இடத்திலே கட்டித்தருவார்களா என்பதையும் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம். அவர்கள் போக்குவரத்துக் கழகத்திற்குத் தருவதற்கு இசைவுத் தந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி தருவதாக ஒத்துக்கொண்டால் இந்த ஆண்டு அந்தப் பணியை நிச்சயமாகத் தொடங்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

152—

பொது மருத்துவமனை

***54551—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சீளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, சீளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக வருகின்ற நோயாளர்களின் சராசரி எண்ணிக்கையைப் பரிசீலித்துப் பார்க்கையில், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு நிருவாகரீதியாக தற்போது சாத்தியக்கூறுகள் எழவில்லை.